berufsberatung.ch orientation.ch orientamento.ch

# தொழிற்கல்வி கற்குமிடத்தை தேடல்: நீ எவ்வாறு திறமையாக நடந்துகொள்ளலாம்?

**தொழிற்குறிக்கோளை தெளிவாக்கு**

நீ தொழிற்கல்வி கற்குமிடத்தைத் தேடும்பேது, உனது தொழிற்தெரிவு நிறைவு செய்யப்பட்டிருக்கவேண்டும். வேறு வகையில் சொல்வதானால்: உன்னால் தெரிவுசெய்யப்பட்ட தொழிலுக்குத் தேவையான திறன்களை நீ கொண்டிருக்கின்றாய் என்பது உனக்குத் தெரியும். முக்கியமானதும், நீ உன்னை அனுமதி அளிக்கவேண்டியதும் யாதெனில் குறிக்கோளுடன் தேடல், திட்டமில்லாமல் தேடுவதும், கிடைக்கும் தொழிற்கல்வி கற்குமிடங்களில் திறமானதை எடுத்துக்கொள்வது என்பதும் தவறு.

**முகவரிகளைப் பெறு**

இப்பொழுது நீ எந்நிறுவனத்தில் அடுத்த கோடைகாலத்தில் உனது விருப்பத் தொழிலைக் கற்பதற்குரிய இடம் வெற்றிடமாக உள்ளது என்பதை அறிந்துகொள்ளமுடியும். இதற்கு நீ உபயோகிப்பதற்காக பலவித சாத்தியங்களும், உதவிகளும் உள்ளன:

- தொழிற்கல்வி ஆலோசனை நிலையத்தில்[1] தொழில் கற்கவுள்ளவர்கள் தாங்கள் கற்கவிரும்பும் தொழில்களைக் கற்கக்கூடிய தொழில் நிறுவனங்களின் முகவரிப் பட்டியலைக் கண்டுகொள்ளலாம்..
- தொழிற்கல்வி கற்குமிடங்களின் வெற்றிடவிபரம் இணையத்தளத்தில் இருந்து பெற்றுக்கொள்ளலாம்.[2]
- தினசரிப் பத்திரிகைகளிலும், இலவச அறிவிப்புக்களிலும் அல்லது நிறுவனங்களின் இணையத்தளங்களிலும் தொழிற்கல்வி கற்குமிட விபரத்தை நீ கண்டுகொள்ளலாம்.
- அநேகமான மாணவர்கள் தங்களுக்குத் தெரிந்தவர்கள் அல்லது உறவினர்கள் மூலமாக தொழிற்கல்வி கற்குமிடத்தைப் பெறுவர். இவ்வாறான தொடர்புகளையும் பயன்படுத்து.

**தொடர்பை ஏற்படுத்து**

இப்பொழுது உன்னிடம் பொருத்தமான முகவரிகள் உள்ளன. இத்தொழில் நிறுவனங்களில் உண்மையில் தொழிற்கல்வி கற்குமிடம் வெற்றிடமாக உள்ளதா என்பதை விசாரி. உனது முதலாவது தொடர்பை தொலைபேசியூடாக மேற்கொள் அல்லது நேரடியாகச் செல். மேலும் நீ எவ்வாறு விண்ணப்பிக்க வேண்டும் என்று சாதகமான முறையில் கேள். இது நிறுவனத்திற்கு நிறுவனம் மாறுபடும். ஒரு நிறுவனம் எழுத்து மூலமான விண்ணப்பத்தை விரும்பும், மற்றொன்று சிலவேளைகளில் உன்னை பிரத்தியேகமாக அறிந்துகொள்ள விரும்பும். முக்கியமானது என்னவென்றால், நீ அந்த நிறுவனம் கேட்கும் வகையில் விண்ணப்பிப்பது.

**விண்ணப்பம் செய்**

ஒரு எழுத்துமூலமான விண்ணப்பத்தை முன்போ, பின்போ ஒவ்வொரு நிறுவனமும் கேட்கும். ஒரு விண்ணப்பக்கோவை எவ்வாறு இருக்கவேண்டும் என்றும், அதனுள் எவ்விடயம் இருக்கவேண்டும் என்றும் தெளிவான விதிமுறைகள் உள்ளன. பாடசாலையில் அல்லது தொழிற்கல்வி ஆலோசனை நிலையத்தில் ஒரு விண்ணப்பக்கோவை எவ்வாறு இருக்கவேண்டும் என்று கேள். அத்துடன் உனக்கு நிச்சயமில்லாது இருப்பின் இங்கு உதவியும் கிடைக்கும். மேலும் விண்ணப்பத்திற்கு உரிய பத்திரங்களை நீ இணையத்தளத்திலும்

---

[1] ஒவ்வொரு மாநிலத்திலும் ஆகக்குறைந்தது ஒரு தொழிற்கல்வி ஆலோசனை நிலையம் இருக்கும். முகவரிகளை பாடசாலையில், கிராமசபையில் அல்லது பின்வரும் இணையத்தளத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

Deutsch: www.adressen.sdbb.ch
Français: www.adresses.csfo.ch
Italiano: www.indirizzi.csfo.ch

தொழிற்கல்வி ஆலோசனை நிலையம் பொதுவாக ஒரு விசேட பெயரில் அல்லது அதன் சுருக்கத்தில் நன்றாக அறியப்பட்டிருக்கும்:

| | |
|---|---|
| சுவிசின் ஜெர்மன்மொழி பேசும் பகுதியில் | BIZ, Laufbahnzentrum |
| சுவிசின் பிரெஞ்சுமொழி பேசும் பகுதியில் | OP, SOPFA, OFPC, COS, OROSP, CIO, OCOSP |
| சுவிசின் இத்தாலிமொழி பேசும் பகுதியில் | orientamento, UOSP |

[2] தொழிற்கல்வி கற்குமிட வெற்றிடங்கள்

| | |
|---|---|
| சுவிசின் ஜெர்மன்மொழி பேசும் பகுதியில் | www.berufsberatung.ch/Lehrstellen |
| சுவிசின் பிரெஞ்சுமொழி பேசும் பகுதியில் | www.orientation.ch/formation |
| சுவிசின் இத்தாலிமொழி பேசும் பகுதியில் | orientamento.ch > scelta professionale > Borsa nazionale dei posti di tirocinio |

பெற்றுக்கொள்ளலாம்.[3] விண்ணப்பக்கோவையை அனுப்புவதற்கு முன்னர் அதை நீ ஒரு தகுதியானவரிடம் காண்பிப்பது முக்கியமானது. விண்ணப்பக்கோவை முழுமையானதாகவும், தொழில் மற்றும் நிறுவனத்திற்குப் பொருத்தமானதாகவும், பிழை இல்லாதும் இருக்கவேண்டும்.
இன்னுமொரு குறிப்பு: இயலுமாயின் ஒரே நேரத்தில் பல இடங்களிற்கு விண்ணப்பி. இதனூடு நீ உனக்கு ஒரு தொழிற்கல்வி கற்குமிடத்தைப் பெறும் சந்தர்ப்பத்தை அதிகரிக்கின்றாய்.

**கண்ணோட்டத்தை வைத்திரு**

நீ உனது அனைத்து விண்ணப்பம் செய்த விபரங்களையும் சரிபார்த்து வைத்திருப்பது உபயோகமானது. இதன் அடிப்படையில் நீ ஒரு பட்டியலை தயார் செய்து, எப்பொழுது நீ விண்ணப்பித்தாய், இங்கு ஒரு குறித்த நேரம் கேட்கப்பட்டதா, எப்பொழுது வரையும் உனக்கு ஒரு அறிவித்தல் தரவிரும்பினர் போன்ற விபரங்களைக் குறித்து வை. இதனால் என்ன செய்யப்பட்டது, யாரிடம் இருந்து ஒரு பதிலை எதிர்பார்க்கின்றாய், எப்பொழுது திரும்ப விசாரிக்கலாம் என்பவற்றை நீ எப்பொழுதும் அறிந்து வைத்திருப்பாய்.

**பரீட்சைகளும், கற்பிப்போருடன் கதைத்தலும்**

இப்பொழுது அதிகமான நிறுவனங்களும், சம்மேளனங்களும் நீ ஒரு ஒத்துப்போகும் பரீட்சையை செய்துள்ளாயா என்று கேட்கின்றன. உனது விருப்பத்திற்குரிய தொழிலுக்கு இது எவ்வாறு உள்ளது என்பதை விசாரித்து அறிந்துகொள்.
நீ ஒருசிலரில் இருந்து தெரிவாகியிருந்தால், அந்நிறுவனத்தின் தலைவர் அல்லது தலைவி உன்னைப் பிரத்தியேகமாக அறிய விரும்புவார். இந்த அறிமுகக் கலந்துரையாடலுக்கு உன்னைத் தயார்ப்படுத்து. சாத்தியமான கேள்விகளையும், பதில்களையும் பற்றிச் சிந்தி. உனக்கு நிச்சயமில்லாவிட்டால் யாரிடமாவது கதைத்துக்கொள். இக்கலந்துரையாடலில் நீ விட்டுவைக்கும் உன்னைப்பற்றிய பிரத்தியேக அபிப்பிராயம் ஒரு முக்கிய பங்கை வகிக்கும். உன்னை நல்ல விதமாய் விற்பனைசெய்! உனக்கு ஆர்வமுள்ளதாகவும், ஊக்கமுள்ளதாகவும் காண்பி.

**மறுப்பிற்கு தயார்ப்படுத்து**

தொழிற்கல்வி தேடுமிட நிலைமைகள் பல தொழில்களுக்கு கடுமையாக உள்ளன. எனவே நீ உனது விண்ணப்பத்திற்கு மறுப்பு கிடைக்கலாம் எனவும் கணக்கிட்டுக்கொள்ளவேண்டும். இதனால் நீ ஒருபோதும் தைரியத்தை இழக்கக்கூடாது. நீ மாற்றமில்லாமல் இருப்பதுடன், உனது முயற்சியைத் தொடர்ந்து கடைப்பிடி. எக்காரணத்திற்காக மறுக்கப்பட்டது என்பதை முடிந்தவரை அறிந்துகொள். எதிர்காலத்தில் நீ அதைத் திருத்திக்கொள்ள முடியும் அத்துடன் உனது வெற்றிக்கான சந்தர்ப்பத்தையும் அதிகரிக்கமுடியும்.

**இசைந்துகொடுக்கும் தன்மையுடன் இரு**

ஒரே ஒரு தொழிலில் மட்டும் உன்னை நீ கடினமாக ஈடுபடுத்தக் கூடாது. சிலவேளைகளில் உனது விருப்பமான தொழிலைக் கற்குமிடத்தைக் கண்டுபிடிக்க முடியாமல் இருக்கலாம். இப்பொழுது நீ வேறொரு தீர்விற்குத் தயாராகவிருப்பது முக்கியமானது.
உன்னுடைய விருப்பமான தொழிலை கடினமுயற்சியுடன், நீண்ட காலம் தேடியும் கிடைக்கவில்லை எனில், அவசியம் அதன் நிலைமையை கவனமாக ஆராயவேண்டும். இதனோடு தொடர்புடைய வேறு தொழிலின் அடிப்படைத் தொழிற்தேர்ச்சிக்கல்வி, ஒரு இடைப்பட்ட வருடம், பயிற்சிவருடம் அல்லது மொழிகற்கும் வருடம் போன்ற சந்தர்ப்பங்களைப் பரீட்சித்துப் பார். உரிய நேரத்தில் செயற்படு மற்றும் தேவையான தகவல்களை அல்லது உதவியைப் பெற்றுக்கொள். முடிந்தவரை உனது தொழிற்கல்வி ஆலோசகருடன் கதைத்துக்கொள் அத்துடன் உனது தொடரும் நடவடிக்கைகளைத் திட்டமிடு. ஓர் அடிப்படைத் தொழிற்தேர்ச்சிக்கல்வி (அல்லது ஒரு நடுத்தரப்பாடசாலை)ஐ நிறைவு செய்திருப்பது உனது தொடர்ந்த முன்னேற்றத்திற்கு பல சாத்தியங்களை உருவாக்கும்.

**SDBB | CSFO – 2011**

[3] சுவிசின் ஜெர்மன்மொழி பேசும் பகுதியில் www.berufsberatung.ch >Berufswahl >Lehrstellensuche >Bewerbung
சுவிசின் பிரெஞ்சுமொழி பேசும் பகுதியில் www.orientation.ch >formation >Toutes des places d'apprentissages >Lettre et CV
சுவிசின் இத்தாலிமொழி பேசும் பகுதியில் orientamento.ch > scelta professionale > Borsa nazionale dei posti di tirocinio >Consigli per la ricerca

# பாடசாலையில் இருந்து தொழிலுக்கு

பெற்றோருக்கான தகவல்

அன்புள்ள பெற்றோருக்கு

உங்களுக்கு 7, 8, 9 அல்லது 10ம் வகுப்பில் ஒரு மகள் அல்லது ஒரு மகன் இருக்கிறார். உங்கள் மகன் அல்லது மகள் தங்களிற்கு ஒரு தொழிலை அல்லது தொடர்ந்து கற்கும் பாடசாலையை தீர்மானிக்கவேண்டும். இது ஒரு முக்கியமான படியாகும்: ஒரு தொழிலில் தேர்ச்சிக்கல்வியை நிறைவு செய்திருப்பது அல்லது மத்திய தர பாடசாலையை நிறைவு செய்திருப்பது, சுவிசில் வாழும் இளம்வயதினர் தொழிலில் தொடர்ந்து வளர்ச்சியடைவதற்கு சிறந்த அடிப்படையாகும்.

**பாடசாலை எவ்வாறு உதவுகின்றது?**

பாடசாலை 8ம் அல்லது 9ம் வகுப்பில் உள்ள மாணவர்கள் ஒரு தொழிலை அல்லது ஒரு தொடர்ந்து கற்கும் பாடசாலையைத் தெரிவுசெய்வதற்கு ஆயத்தம் செய்கின்றது. நீங்கள் ஆசிரியரிடம் உதாரணமாக பெற்றோர் மாலையில் இவ்வாயத்தம் எவ்வாறு நடைபெறும் என்பதை வினாவுங்கள்.

**தொழிற்கல்வி ஆலோசனை நிலையம்[1] எவ்வாறு உதவுகின்றது?**

தொழிற்கல்வி ஆலோசனை நிலையம் தொழில்களையிட்ட மற்றும் தொடர்ந்து கற்பதற்கு சாத்தியமான தகவல்களை வழங்குகின்றது. அத்துடன் ஒருவர் தனது ஆர்வம், திறன் மற்றும் வேலை வாய்ப்பு போன்ற விபரங்களை பிரத்தியேக கலந்துரையாடலில் பெறலாம். இவ்வழங்கல் மாணர்களுக்கு கட்டணமற்றதும், நம்பகரமானதும் ஆகும்.

பாடசாலையும், தொழிற்கல்வி ஆலோசனை நிலையமும் இளம்வயதினருக்கு ஒரு தொழிலை அல்லது தொடர்ந்து கற்கக்கூடிய பாடசாலையைத் தெரிவு செய்வதற்கு உதவுகின்றன. தேவைப்படின் தொழிற்தேர்ச்சிக்கல்வி கற்குமிடம் தேடுவதற்கும் உதவும். ஆனால் பொறுப்பும், முக்கிய வேலையும் குடும்பத்திடமே இருக்கும்.

**இளம்வயதினர் தாங்களாகவே என்ன செய்யவேண்டும்?**
**நீங்கள் எவ்வாறு உங்கள் பிள்ளைகளுக்கு உதவமுடியும்?**

பாடசாலையின் பின்னர் ஒரு தொழிற்தேர்ச்சிக்கல்வி கற்குமிடத்தைக் கண்டுபிடிக்கும் வரை உங்கள் மகன் அல்லது மகள் தாங்களாகவே செயற்படவேண்டும். அநேகமானவர்களுக்கு இது இலகுவானது அல்ல. அதனால் குடும்பம் அவர்களுக்கு உதவுவது முக்கியமானது. உங்களிடம் கேள்விகள் இருந்தால், உங்களால் தொடர்ந்து செல்லமுடியாவிட்டால், தொழிற்கல்வி ஆலோசனை நிலையத்தை அணுகுங்கள்.

ஒரு தொழிலை அல்லது தொடர்ந்து கற்கக்கூடிய பாடசாலையைத் தெரிவு செய்வது என்பது ஒரு தொடர்ந்த செயற்பாடு. இதன் அர்த்தம் என்னவெனில், கேள்விகளை எழுப்புவதும், அதற்குரிய விடைகளைத் தேடுவதும் ஆகும். விடை கண்டுபிடிக்கவேண்டிய முக்கியமான கேள்விகளும், முக்கிய வழிகளும் பின்வருமாறு:

**அ) தன்னைத் தானே அறிந்துகொள்ளல்**

*பின்வரும் வினாக்களை உங்கள் பிள்ளைகள் தங்களிடம் கேட்கவேண்டும்:*

- எதை என்னால் பாடசாலையில் நன்றாகச் செய்யமுடியும்? எப்பாடம் எனக்கு விருப்பமானது?

---

[1] ஒவ்வொரு மாநிலத்திலும் ஆகக் குறைந்தது ஒரு தொழிற்கல்வி ஆலோசனை நிலையம் இருக்கும். முகவரிகளை பாடசாலையில், கிராமசபையில் அல்லது பின்வரும் இணையத்தளத்தில் பெற்றுக்கொள்ளலாம்.
ஜெர்மன்: www.adressen.sdbb.ch    பிரெஞ்சு: www.adresses.csfo.ch    இத்தாலி: www.indirizzi.csfo.ch

தொழிற்கல்வி ஆலோசனை நிலையம் பொதுவாக ஒரு விசேட பெயரில் அல்லது அதன் சுருக்கத்தில் நன்றாக அறியப்பட்டிருக்கும்:

| | |
|---|---|
| சுவிசின் ஜெர்மன்மொழி பேசும் பகுதியில் | BIZ, Laufbahnzentrum |
| சுவிசின் பிரெஞ்சுமொழி பேசும் பகுதியில் | OP, SOPFA, OFPC, COS, OROSP, CIO, OCOSP |
| சுவிசின் இத்தாலிமொழி பேசும் பகுதியில் | orientamento, UOSP |

- எதை நான் எனது பொழுதுபோக்கும் சந்தர்ப்பத்தில் அல்லது குடும்பத்தில் கற்றுக்கொண்டேன்? (உதாரணமாக வேறு மொழிகளைப் பேசக்கற்றுக்கொள்ளல், சமைத்தல், பொருட்களை வாங்குதல், எதையாவது திருத்துதல், சிநேகிதர்களுக்கு பிரச்சனைகள் ஏற்படின் அவற்றைக் காதுகொடுத்து கேட்டல், விளையாட்டுக் கழகங்களில், இளையோர் குழுக்களில் அல்லது வேறு மன்றங்களில் விழாக்கள் நடைபெறும் சந்தர்ப்பங்களில் உதவி செய்தல்.)
- நான் நேரம் தவறாது, நம்பகமான வகையில் ஒரு பகுதிநேர வேலைசெய்ததை என்னால் அத்தாட்சிப்படுத்தமுடியுமா? (உதாரணமாக பத்திரிகை விநியோகித்தல், பிள்ளைகளைப் பார்த்தல், புல்வெட்டுதல், ஒரு நிறுவனத்தில் வாராவாரம் 2-3 மணித்தியாலங்கள் உதவிசெய்தல்)
- எனது பலம் எது? எனது பலவீனம் எது?

பின்வரும் ஆதரவை நீங்கள் பெற்றோராக வழங்கமுடியும்:
- நீங்கள் உங்கள் மகன் அல்லது மகளிற்கு எத்தொழில் பொருத்தமானது மற்றும் அவர்களின் பலம் எது என்பதை அவர்கள் சிந்திப்பதற்கு உதவுங்கள்.

**ஆ) தொழில்களை அறிந்து கொள்ளல்**

*தகவல்களின் ஊடாகவும், „தொழிலை முகர்ந்துபார்ப்பதன்[2] ஊடாகவும் உங்கள் பிள்ளைகள் தொழில்களை அறிந்து கொள்வர்*

- தகவல்களை அறிந்து கொள்ளல்: தொழில்விபரங்களை வாசித்தல், தொழிற்படங்களைப் பார்த்தல், தகவல் நிகழ்வுகள்3, தொழில்கள் மற்றும் தொழிற்தேர்ச்சிக்கல்வி சார்ந்த கண்காட்சிக்குச்4 செல்லல். தொழிற்கல்வி ஆலோசனை நிலையத்தில் சந்தேகங்களைத் தெளிவுபடுத்தல்.
- „Schnupperlehren" செய்தல். „Schnupperlehren" இல் ஒருவர் ஒரு தொழிலை ஒரு நிறுவனத்தில் மேலும் நன்றாக அறிந்துகொள்வார். ஒரு „Schnupperlehren" 2 தொடக்கம் 3 நாட்கள் வரை நடைபெறும். நிறுவனங்கள் „Schnupperlehren" ஐ அடிக்கடி தெரிவுசெய்வதற்கு உபயோகப்படுத்தும். அவர்கள் இளம்வதினரை நன்கு அறிய விரும்புவர். யார் „Schnupperlehren" இல் நல்ல அபிப்பிராயத்தை ஏற்படுத்தினாரோ, அவருக்கு அந்நிறுவனத்தில் ஒரு தொழிற்கல்வி கற்குமிடத்தை பெறுவதற்கு அதிக சந்தர்ப்பங்கள் உண்டு.

*எவ்வாறான ஆதரவை நீங்கள் பெற்றோராக வழங்கமுடியும்?*

மகள் அல்லது மகனின் தொழில் நுகர்ந்து பார்த்த அனுபவத்தையிட்டு அவர்களுடன் கதையுங்கள்.

**இ) தொழில்களையும், பாடசாலைகளையும் தெரிவுசெய்தல்**

*தொழிற்தெரிவு நடைமுறையில் உங்கள் பிள்ளை பின்வருவனவற்றை அவதானிக்க வேண்டும்:*

- ஒரு தொழிலை அல்லது தொடர்ந்து கற்கும் பாடசாலையைத் தெரிவு செய்யும் போது சிந்திப்பதற்கும், பல்வேறு விடங்களை மேற்கொள்வதற்கும் நேரம் தேவை.
- பொருத்தமான ஒரு தொழிலை அல்லது பாடசாலையைத் தெரிவு செய்யும் போது முக்கியமானது என்னவெனில், எப்பொழுதும் 1-2 மாற்று வழிகளை வைத்திருக்க வேண்டும்.
- ஆசிரியருடன் கதைத்தல்: " எங்கு நான் குறைவாக இருக்கிறேன்? 9 அல்லது 10ம் வகுப்பின் பின்னர் மேற்கொள்ளும் தேர்ச்சிக்கல்விக்கு பாடசாலையில் நான் எவ்வாறு ஆயத்தம் செய்யலாம்?"

---

2

| | |
|---|---|
| ஜெர்மன்மொழி | Schnupperlehre |
| பிரெஞ்சுமொழி | stage d'information professionnelle; stage en entreprises |
| இத்தாலிமொழி | stages |

3 தகவல் நிகழ்வுகள்

| | |
|---|---|
| ஜெர்மன்மொழி பேசும் சுவிசில் | www.berufsberatung.ch >Berufswahl >Informationsveranstaltungen |
| பிரெஞ்சுமொழி பேசும் மற்றும் இத்தாலிமொழி பேசும் சுவிசில் | எவ்வகையான வழங்கல்கள் உள்ளன என தொழிற்கல்வி ஆலோசனை நிலையத்தில் அல்லது பாடசாலையில் கேளுங்கள். |

4 தொழில்கள் மற்றும் தொழிற்தேர்ச்சிக்கல்வி சார்ந்த கண்காட்சி:

தொழிற்கல்வி ஆலோசனை நிலையத்தில் அல்லது பாடசாலையில் எப்பொழுது, எங்கு அடுத்த தொழில்கள் மற்றும் தொழிற்தேர்ச்சிக்கல்வி சார்ந்த கண்காட்சி நடைபெறும் என்பதை கேளுங்கள். இக்கண்காட்சிகள் வெவ்வேறு பெயர்களில் நடைபெறும்:

| | |
|---|---|
| ஜெர்மன்மொழி | Berufsmesse, Ausbildungsmesse, Berufsschau |
| பிரெஞ்சுமொழி | Salon des métiers, Cité des métiers, salon de la formation |
| இத்தாலிமொழி | ESPOProfessioni |

*எவ்வாறான ஆதரவை நீங்கள் பெற்றோராக வழங்கமுடியும்?*

- தீர்மானிக்கும் செயற்பாட்டில் உங்கள் ஆர்வத்தைக் காட்டுங்கள்.
- உங்கள் பிள்ளைகள் தெரிவு செய்த தொழில் மற்றும் மாற்று வழிகளையிட்டு அவர்களுடன் கதையுங்கள்.

**ஈ) ஒரு தொழிற்தேர்ச்சிக்கல்வி கற்குமிடத்தைத் தேடல்** *(பொதுவாக பாடசாலையை விட்டு விலகுவதற்கு ஒரு வருடம் முன்னர்)*

*தொழிற்தேர்ச்சிக்கல்வி கற்குமிடத்தைத் தேடும்போது உங்கள் பிள்ளைக்கு பின்வரும் தகவற்பிரசுரம் மேலதிக உதவியை வழங்கும்:*

- " தொழிற்தேர்ச்சிக்கல்வி கற்குமிடத்தைத் தேடல்: நீ எவ்வாறு திறமையாக நடந்துகொள்ளலாம்? [5]

*எவ்வாறான ஆதரவை நீங்கள் பெற்றோராக வழங்கமுடியும்?*

- நேரத்துடன் ஒரு தொழிற்தேர்ச்சிக்கல்வி கற்குமிடத்தைத் தேடுவதையிட்டு சிந்திப்பதற்கு உங்கள் மகள் அல்லது மகனிற்கு உதவுங்கள்.
- உங்கள் மகள் அல்லது மகன் நிராகரிக்கப்பட்டதன் பின்னரும் தொடர்ந்து தேடுவதற்கு உற்சாகமூட்டுங்கள்.

**தாய், தந்தையரால் என்ன செய்யமுடியும் என்பதை தொடரும் உதாரணங்களில் இருந்து அறிந்து கொள்வீர்கள்.**

**ஆசிரியருடன் கதைத்தல்**

கமலா 8ம் வகுப்பில் இருக்கிறாள். அவள் ஒரு தொழிலையோ, தொடரும் பாடசாலையைப் பற்றியோ வீட்டில் ஒருதரமும் கதைப்பதில்லை. என்ன நடக்கின்றது? பெற்றோர் தங்களைத் தாங்களே கேட்கின்றனர். தாய் பாடசாலைக்குச் சென்று, கமலா பாடசாலையிலும் ஒரு தொழிலை அல்லது ஒரு பாடசாலையைத் தெரிவதையிட்டு அக்கறை காட்டுவதில்லையா என ஆசிரியரை வினாவுகின்றார்.

**வெளிப்படையாக இருத்தல் பல சாத்தியங்களைத் தரும்**

மோகன் 9ம் வகுப்பில் கல்வி கற்கின்றான். அநேக இளைஞர்களைப் போன்று அவனும் கணினியாளராக வரவிரும்புகின்றான். அவன் தொழிற்தேர்ச்சிக் கல்வி கற்குமிடத்திற்கு விண்ணப்பிக்கும் போது அனைத்தும் மறுக்கப்பட்டு வருகின்றன. பெற்றோருக்கான மாலையில் அவனது பெற்றோர் கணினித் துறையில் மிகக்குறைந்த தேர்ச்சிக்கல்வி கற்குமிடங்கள் உள்ளதாக அறிகின்றனர். அவர்கள் மோகனை தொழிற்கல்வி ஆலோசனை நிலையத்தில் ஒரு தனிப்பட்ட ஆலோசனைக்கு விண்ணப்பிக்கச் சொல்கின்றனர். மோகன் ஒரு புதிய எண்ணத்துடன் வீட்டிற்கு வருகின்றான். அவன் கணிதத்தில் திறமையாகவும், தொழில்நுட்பத்தில் ஆர்வமாகவும் உள்ளதால், தற்பொழுது அவன் ஒரு பல்வகை இயந்திர திருத்துனருக்குரிய தேர்ச்சிக்கல்வி கற்குமிடத்தைத் தேடுகின்றான். தொழிலாளியாக முகர்ந்து பார்க்க ஒரு பல்வகை இயந்திர திருத்துனருக்குரிய தேர்ச்சிக்கல்வி கற்குமிடத்தைத் தேடுகின்றான். இத்தொழிலிலும் அவன் கணினியுடன் வேலை செய்யவேண்டும் என்பதை இப்பொழுது அவன் அறிவான். அவன் விரும்பினால் இத்தேர்ச்சிக்கல்வியைக் கற்றதன் பின்னர் கணினித் துறையில் சிறப்புக் கல்வியைக் கற்கலாம்.

**குடும்பம் எதிர்பார்ப்புகளைக் கொண்டுள்ளது**

"பாலா எப்பொழுது மேற்கல்வியை ஆரம்பிக்கின்றான்?" கிராமத்திலுள்ள அவனது உறவினர்கள் விசாரிக்கின்றனர். பாலாவின் பெற்றோர் " நீங்கள் நினைப்பதை விட சுவிசில் அதிகம் வேறுபட்டவை" என்கின்றனர். "பாலா ஆற்றல் மிக்க கைகளைக் கொண்டுள்ளதுடன், மோட்டார் வாகனங்களிலும் ஆர்வமாயுள்ளான். அவன் மோட்டார் வாகனம் திருத்துபவராக வரவிரும்புகின்றான். இது ஒரு நல்ல தேர்ச்சிக்கல்வி. அத்துடன் இந்த தொழில் அவனுக்குப் பொருத்தமாகவும் இருக்கின்றது. நாங்கள் எங்கள் மகன் இவ்வளவு அடைய முடிந்ததையிட்டு பெருமைப்படுகின்றோம். இறுதியாக ஒருவர் ஒரு வேற்றுமொழி பேசும் பாடசாலையில் கல்வி கற்கவேண்டும் என்பது அவ்வளவு இலகுவானதல்ல." மோட்டார்வாகனம் திருத்துபவராக பாலா உலகம் முழுவதும் வேலையைப் பெற்றுக்கொள்ளலாம்.

**மிகக்குறைந்த மொழியறிவு**

தேவி புத்திசாலிப் பெண். அவள் 15 வயதில் சுவிசிற்கு வந்தபடியால் ஒரு உயர்ந்த கல்வித்தகமையை எதிர்பார்க்கும் தேர்ச்சிக்கல்வியைக் கற்பதற்குரிய பாடசாலைக் கல்வி கற்பதற்கு போதிய மொழியறிவை இன்னமும் பெறவில்லை. தேவி கட்டாய பாடசாலையின் பின்னர் தொழில் ஆயத்தப் பாடசாலை வருடத்தை அல்லது ஒரு தேர்ச்சிக்கல்விக்கு முந்திய கல்வியை அல்லது இரண்டு வருட அடிப்படைத் தொழிற்பயிற்சி ஒன்றை மேற்கொள்ளமுடியும் என்பதை தேவியும், அவளது பெற்றோரும் அறிந்து கொண்டனர். தேவிக்கும் அவளது பெற்றோருக்கும் அனைத்தும் புதிது. அவர்கள் இச்சாத்தியங்களை ஒருதரம் அறியவேண்டும்.

---

5 www.berufsberatung.ch/migration
www.orientation.ch/migration
www.orientamento.ch/migrazione

தேவியும் ஏமாற்றமடைகின்றாள். அவள் ஜிம்நாசியம் செல்வதை கனவு கண்டாள்... அவளது பெற்றோர் அவளை ஆறுதற்படுத்தினர். ”உனக்கு சிலவேளைகளில் மற்றவர்களை விட அதிக காலம் தேவைப்படலாம். உன்னுடைய கற்றல் குறைகளை நிவர்த்தி செய்த பின்னர், ஒரு நல்ல தொழிற்தேர்ச்சிக் கல்வியின் அடிப்படையைக் கற்று பின்னர், சிலவேளை நீ பட்டப்படிப்பை மேற்கொள்ளலாம். உன்னால் அது முடியும்!”

**தொழில் அல்லது திருமணம்?**

சபீனாவிற்கு 16 வயதாகின்றது. ஒரு இளைஞன் விருந்தினராக வருகின்றான். அவன் சபீனாவின் தந்தையை வினாவுகின்றான்: ” நான் சபீனாவைத் திருமணம் செய்யமுடியுமா?” தந்தை பதிலளிக்கின்றார்: ”எங்கள் குடும்பங்கள் நெருக்கமானவை. எங்கள் முறைப்படி சபீனாவிற்கும், உனக்கும் திருமணம் நடந்தால் பொருத்தமாக இருக்கும். ஆனால் உனக்குத் தெரியும், நாங்கள் சுவிசில் வசிக்கின்றோம். இந்த வாழ்க்கையும் மாறிக்கொண்டிருக்கின்றது. இங்கு ஆண்களும், பெண்களும் ஒரு தொழிலை மேற்கொள்வது முக்கியமானது. எனவே சபீனா முதலில் ஒரு தொழிலைக் கற்கட்டும். பின்னர் அவள் யாரைத் திருமணம் செய்ய விரும்புகின்றாள் என்பதை தானே தீர்மானிக்கமுடியும்.

**தந்தை தனது மகனுக்கு வழிகாட்டல்**

ராஜா பாடசாலையின் இறுதி வருடத்தில் இருக்கின்றான். பாடசாலையில் கல்வி கற்பது அவனுக்கு இலகுவல்ல. அவன் ஒரு தச்சுத்தொழிலாளியாக ஒரு தொழிலை முகர்ந்து பார்க்க சந்தர்ப்பமுள்ளது. இந்த தொழிலை முகர்ந்துபார்த்தல் நன்றாக நடைபெற்றால், அந்த மரவேலைத்தளத்தில் இரண்டு வருட அடிப்படைத் தேர்ச்சிக்கல்வி ஒன்றைப் பெறமுடியும் என்பது அவனுக்குத் தெரியும். இதனால் அவன் பதட்டமடைந்துள்ளான். அத்துடன் அவன் தன்னால் அங்கு போகும் வழியை சரியா அறிந்து குறித்த நேரத்தில் அங்கு இருக்கமுடியுமா என்றும் நிச்சயமில்லாது இருக்கின்றான். அவனது தந்தை அவனைத் தைரியப்படுத்துகின்றார்: உனக்கு இந்த தொழிலைப் பற்றி ஏற்கனவே அதிகம் தெரியும். நீ கடுமையாக வேலைசெய். முதல்நாள் நான் உன்னை அந்த வேலைத்தளத்தின் வாசல் வரை கூட்டிச்செல்கின்றேன். நாங்கள் வீட்டில் இருந்து நேரத்துடன் புறப்படுவோம். எங்களிற்கு நேரம் இருந்தால் சிறிதாக சுற்றிவருவோம். இது பதட்டமடைந்தவர்களுக்கு உதவியளிக்கும்.

**தொடர்புகளை முற்றாகப் பயன்படுத்தல்**

மேரி ஒரு நல்ல மாணவி. அவளுக்கு பிரெஞ்சு, ஜெர்மன் மற்றும் கணிதத்தில் நல்ல புள்ளிகள். இதைவிட அவளால் தமிழும் நன்றாக கதைக்க, வாசிக்க, எழுத முடியும். அவள் பல தொழில்களைப் பார்வையிட்டதுடன், தொழிற்தகவல்கள் வழங்கும் நிகழ்வுகளுக்கும் சென்றுள்ளாள். அத்துடன் தொழிலை முகர்ந்தும் பார்த்துள்ளாள். இப்பொழுது அவள் அலுவலகத்தில் பணிபுரியும் தொழிலைக் கற்க விரும்புவதில் தெளிவாக இருக்கின்றாள். அவள் பல விண்ணப்பங்களை அனுப்பினாள், ஆனால் மறுக்கப்பட்டு மட்டுமே வருகின்றன. தந்தை ஒரு கட்டடவேலைத் தளத்தில் பணிபுரிகின்றார். அவர் தனது முதலாளியிடம் தனது மகள் தொழிற்தேர்ச்சிக்கல்வி கற்குமிடத்தை தேடுவதாகக் கூறுகின்றார். ”எங்கள் அலுவலகத்தில் கேளுங்கள். அங்கும் தொழிற்கல்வி கற்பவர்களைப் பயிற்றுவிக்கின்றனர்” என்றார் முதலாளி. ”நான் அதைச் செய்கின்றேன். என்னுடைய மனைவியும் தான் வேலைசெய்யும் வைத்தியசாலையில் கேட்கமுடியும். எங்களுக்கு உதவி செய்யக்கூடிய ஒரு அயலவர்தன்னும் இருக்கமாட்டார்களா?” என்று தந்தை எண்ணிக்கொண்டார்.

**கைவிட்டுவிட வேண்டாம்**

திரும்பத் திரும்ப சிவா விற்பனையாளராக கற்க விண்ணப்பிக்கும் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படுகின்றன. அவன் ஏற்கனவே பல விண்ணப்பங்களை அனுப்பிவிட்டான். ஆனால் எதுவும் சரிவரவில்லை. இப்பொழுது சிவா புதிய தொழிற்தேர்ச்சிக்கல்வி கற்குமிடத்தை தேடுவதற்கும், விண்ணப்பம் அனுப்புவதற்கும் அடிக்கடி மறந்துவிடுகின்றான். எப்படியோ அவன் தனது உற்சாகத்தை இழந்து வருகின்றான். இரவு உணவின் போது பெற்றோர் அபிப்பிராயப்படுகின்றனர்: நாங்கள் தொழிற்கல்வி ஆலோசனை நிலையத்திற்குச் செல்வோம். அங்கு உனக்கு என்ன செய்யமுடியும், எவ்வகையான உதவியைப் பெறலாம் என்பதை அறிவோம். கைவிட்டுவிடாதே. உன்னால் அடையமுடியும். நாங்கள் உனக்கு ஆதரவாகவும், வழிநடத்தவும் உள்ளோம்.”

அன்புள்ள பெற்றோருக்கு,

உங்கள் மகளின் அல்லது மகனின் தொழிற்தெரிவையிட்டு வினாக்கள் உண்டென்றால், காத்திருக்கவேண்டாம். ஆசிரியரிடம் அல்லது தொழிற்கல்வி ஆலோசனை நிலையத்தில் வினாவுங்கள்.

**SDBB | CSFO – 2011**

# சுவிசில் வேலை செய்வதற்கும், கற்பதற்குமான வழிகள்

வளர்ந்தோருக்கு தகவல்கள்

நீங்கள் உங்கள் பாடசாலைக்கல்வியையும், தொழிற்கல்வியையும் வெளிநாட்டில் மேற்கொண்டுள்ளதுடன், சுவிசில் வேலை தேடுகின்றீர்களா? அல்லது சுவிசில் நீங்கள் தொடர்ந்து கற்க விரும்புகின்றீர்களா? இப்பிரசுரத்தில் சில முக்கியமான தகவல்களை நீங்கள் பெறலாம். இத்தகவல்கள் உங்களிற்கு வேலையை அல்லது தொடர்ந்து கற்கும் சாத்தியங்களைத் தேடுவதற்கு உதவும் முதற்படியாக இருக்கக்கூடும்.

## „Parlez-vous français?“ „Sprechen Sie Deutsch?“ „Parla italiano?“

"பிரெஞ்சுமொழி கதைப்பீர்கள்?" "ஜெர்மன்மொழி கதைப்பீர்களா?" "இத்தாலிமொழி கதைப்பீர்களா?"

எது எவ்வாறாயினும், நீங்கள் ஒரு வேலையைத் தேடுவதாகவோ அல்லது ஒரு தேர்ச்சிக்கல்வியை கற்க விரும்புவதாகவோ இருந்தால்: முக்கியமான நிபந்தனைகளில் ஒன்று அந்த பிரதேசமொழி[1] அறிவு அவசியம். ஒருவேளை நீங்கள் ஜெர்மன்மொழி பேசும் பிரதேசத்தில் வாழ்ந்தால்: எழுத்துமொழியுடன் ஆரம்பியுங்கள்! இதனூடு பின்னர் நீங்கள் பேச்சுமொழியான சுவிஸ் ஜெர்மன்மொழியை விளங்கிக்கொள்வதற்கும் அல்லது கதைப்பதற்கும் நல்ல அடிப்படையைப் பெறுவீர்கள்.
ஓர் உதவிவேலைக்கு தேவையான மொழிகளைப் புரிந்துகொள்ளவும், சிறிது கதைக்கவும் முடிந்தால் போதுமானது. ஆனால் இப்பொழுது அதிகமான உதவிவேலைகளில் கூட உங்களிற்கு சிறிதளவு வாசிக்கவும், எழுதவும் முடியவேண்டும் என்றும் எதிர்பார்க்கப்படுவதுடன், கூடிய தகமைகள் எதிர்பார்க்கப்படும் வேலைகளுக்கு நீங்கள் மேலும் அதிகமான மொழியறிவைக் கொண்டிருக்கவேண்டும் என்றும் எதிர்பார்க்கப்படுகின்றது. ஓர் தொடர்ந்த கற்றலுக்கு அல்லது பட்டப்படிப்பிற்கு நீங்கள் கடினமான வாக்கியங்களை வாசிக்கவும், விளங்கிக்கொள்ளவும் அத்துடன் தானே எழுதவும் தெரிந்திருக்க வேண்டும்: உங்கள் குறிக்கோளைப் பொறுத்து நீங்கள் வெவ்வேறு மொழியறிவு நிலையை அடைந்திருக்க வேண்டும். எனவே உங்கள் குறிக்கோளை அடைவதற்கு எம்மொழியறிவு நிலை தேவை என்பதை நீங்கள் தெரிந்து வைத்திருப்பது அவசியம்.
மேலதிகமாக: சுவிசில் தொழிலுக்கு அல்லது தொடர்ந்து கற்பதற்கு மட்டும் மொழி அவசியமில்லை. அத்துடன் வேறு வாழ்க்கைச் சூழலலிலும் மொழியறிவு உபயோகமானது: நீங்கள் அயலவர்களுடன் உரையாட, பொருட்களை வாங்க, உங்கள் பிள்ளையின் ஆசிரியருடன் அல்லது வைத்தியருடன் உரையாட முடியும் மற்றும் படிவங்களை நிரப்ப, அலுவலங்களுடனும், மேலதிகாரிகளுடனும் தொடர்புகொள்ள முடியும். அத்துடன் நீங்கள் ஒருசில வருடங்களின் பின்னர் ஒரு தொழிலைத் தேட விரும்பினால் அல்லது தேட வேண்டுமானால், ஏற்கனவே நீங்கள் முக்கியமான முதலாவது அடியை மேற்கொண்டிருப்பீர்கள்!

மொழிவகுப்புகளின் பொதுவான கண்ணோட்டத்தை நீங்கள் இணையத்தளத்தில்[2] பெறலாம். மொழிவகுப்புகள் தொடர்பான மேலதிக தகவல்களை நீங்கள் உங்கள் தொழிற்கல்வி ஆலோசனை நிலையத்திலும் பெறலாம். தொழிற்கல்வி ஆலோசனை நிலையம் தொடர்பான விபரங்களை இத்தகவலின் இறுதிப்பக்கத்தில் பார்க்க.

### வேலை தேடுபவர்களுக்கு உதவிக்குறிப்புகள்

வேலை தேடும்போது உங்கள் மொழிஅறிவுடன், உங்கள் தேர்ச்சிக்கல்வி, உங்கள் தொழில் அனுபவம் மற்றும் வெளிநாட்டவர் வதிவிட அனுமதி ஆகியவையும் பங்குவகிக்கும். வர்த்தக நிலைமையைப் பொறுத்து சுவிசில் ஒரு தொழிலைப் பெறுவது கடினமாக அமையும். விசேடமாக நீங்கள் முன்னொருபோதும் வேலை செய்யாவிட்டால். எனவே சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி சுவிசில் வேலை அனுபவங்களைச் சேகரியுங்கள்: உதாரணமாக ஒரு பயிற்சிநிலை அல்லது ஒரு வேலை, சிலவேளைகளில் நீங்கள் நல்ல கற்கையை மேற்கொண்டிருந்தாலும். பின்னர் சிலவேளைகளில் அதே நிறுவனத்திலேயே ஓர் நல்ல வேலையைப் பெறக்கூடும் அல்லது நன்கு பயிற்சி பெற்றதற்குரிய சான்றிதழைப் பெறக்கூடும். பின்னர் நீங்கள் விண்ணப்பிக்கும்போது இச்சான்றிதழால் நல்ல சந்தர்ப்பத்தைப் பெறுவீர்கள்! ஊதியமற்ற வேலைகளும் கூட ஒரு நல்ல சந்தர்ப்பத்தை வழங்கக்கூடும். இங்கு

[1] சுவிஸ் நான்கு மொழிகளை அரசமொழியாகக் கொண்டுள்ளது: ஜெர்மன்மொழி, பிரஞ்சுமொழி, இத்தாலிமொழி, ரோமானியமொழி

[2] இணையத்தளத்தில் மொழிவகுப்புகள்

| | |
|---|---|
| deutsch: | www.w-a-b.ch |
| français: | www.bop.ch |
| italiano: | www.orientamento.ch - Borsa delle offerte di perfezio-namento |

வேலை அனுபவங்களைச் சேகரிப்பதுடன், ஆட்களையும் தெரிந்துகொள்வீர்கள். இவர்கள் உங்களுக்கு சிலவேளைகளில் வேலைதேடுவதில் உதவக்கூடும்.
உங்கள் உறவினர்கள், சிநேகிதர்கள் மற்றும் தெரிந்தவர்களிற்கு நீங்கள் வேலை தேடுவதைக் கூறுங்கள். சிலவேளைகளில் அவர்களின் நிறுவனத்தில் சடுதியாக ஒரு வெற்றிடம் ஏற்படலாமா? அல்லது அவர்களின் சிநேகிதர்கள் ஒரு வெற்றிடம் உள்ளதை அறிந்துள்ளனரா?
ஒரு நிறுவனத்தில் வேலையை பத்திரிகை விளம்பரத்தினூடு, இணையத்தளத்தில் மற்றும் நேரிடையான தொடர்புகளின் மூலம் கண்டுபிடிக்கலாம். அத்துடன் பிரதேச தொழில் நடுவகம்[3] தொழில் தேடுவதற்கு ஆதரவளிக்கும்.

### வெளிநாட்டுப் பட்டத்தை அங்கீகரித்தல்

நீங்கள் உங்கள் நாட்டில் ஓர் தேர்ச்சிக்கல்வியை பட்டத்துடன் அல்லது டிப்ளோமாவுடன் முடித்துள்ளீர்களா? இப்பட்டத்தை நீங்கள் உங்கள் பட்டம் அல்லது டிப்ளோமா இங்கு என்ன பெறுமதியைக் கொண்டுள்ளது என்பதைப் பரீட்சித்து அறியலாம். விதிமுறைகளைக் கொண்ட தொழில் சம்பந்தமான டிப்ளோமா என்றால், அத்தொழிலைச் செய்வதற்கு அங்கீகாரம் (சமதகமை) அவசியம். விதிமுறைகள் அற்ற தொழில் எனில், அரச தொடர்பகம் ஒரு தகுதிநிலை அத்தாட்சியைப் பெறச் சிபாரிசு செய்கின்றது. ஏனெனில் நீங்கள் சுவிசில் இவ் வேலையைச் செய்வதற்கு உங்கள் டிப்ளோமாவை அங்கீகரிக்கத் தேவையில்லை. இது வேலைச் சந்தையிலேயே தங்கியுள்ளது. வேலை வழங்குபவரே வேலைக்கு விண்ணப்பிப்பவர் ஒரு டிப்ளோமாவை வைத்திருக்கவேண்டுமா, இல்லையா என்பதைக் கவனத்திலெடுப்பார். தகுதிநிலை அத்தாட்சி என்னும்போது BBTஇன் அத்தாட்சி, பாடசாலை, எதிர்கால வேலை வழங்குனர் அத்துடன் சுவிஸ் பாடசாலை அமைப்பு முறையுடன் வெளிநாட்டு டிப்ளோமா மற்றும் அத்தாட்சியை வகைப்படுத்தும் அதிகாரிகள் கையாளுவர்.
டிப்ளோமா அல்லது தகுதிநிலை சமமாக மதிப்பிடப்பட்டாலுங் கூட, உங்கள் தொழிலுக்கான ஓர் இடத்தைப் பெறுவதற்கு உத்தரவாதமில்லை. விசேடமாக உங்களுக்கு தொழில் அனுபவம் இல்லாதிருந்தால். ஆனால் நீங்கள் உங்கள் பாதையில் ஒரு முக்கிய அடியை எடுத்து வைத்திருக்கின்றீர்கள். அத்துடன் நீங்கள் சிலவேளை இங்கு ஒரு தொடர்கல்வியை மேற்கொள்ளலாம். இது உங்கள் வெளிநாட்டுத் தேர்ச்சிக்கல்வியுடன் சேர்ந்து, சுவிஸ் தேர்ச்சிக் கல்விப் பட்டத்தைப் பெற வழிவகுக்கும். நீங்கள் எவ்வாறு செயற்படவேண்டும் என்பதைப் பற்றி அறிய அரச தொடர்பகத்தை [4]அணுகுங்கள்.

### சுவிசில் கல்வி மற்றும் தொழிற்கல்வி முறைகள்

சுவிசில் ஒரு தொழிலைக் கற்கும் வழி உங்கள் தாய்நாட்டில் இருந்து மிகவும் வேறுபட்டது. இங்கு ஒரு சிறிய அளவிலான தொழில்களை மாத்திரமே மத்தியதரநிலைப் பாடசாலைகளிலும், அதன் பின்னர் பல்கலைக்கழகங்களிலும் பயிலமுடியும். அநேக சுவிஸ் இளம்வயதினர் கட்டாய பாடசாலையின் பின்னர் அடிப்படைத் தேர்ச்சிக் கல்வியொன்றைக் கற்கின்றனர்: இவர்கள் மூன்று தொடக்கம் நான்கு வருடங்கள் தங்கள் தேர்ச்சிக்கல்வியின் போது ஒருபுறம் ஒரு நிறுவனத்தில் பயில்வதுடன் (பயிற்சி), மறுபுறம் அறிமுறையைக் கற்க பாடசாலைக்குச் செல்வர். சுவிசில் ஏறத்தாள 250 தொழில்கள் கட்டாய பாடசாலையை நிறைவு செய்ததன் பின்னர் கற்கக்கூடியதாக உள்ளன. இவ்வடிப்படை தொழிற்தேர்ச்சிக் கல்வியின் பின்னர் ஒவ்வொரு தொழிலுக்கும் பல தொடர்ந்து கற்கும் சாத்தியங்கள் உள்ளன. உங்கள் தொழிலை சுவிசில் எவ்வழியில் கற்கின்றனர் என்பதை அறிந்துகொள்ளுங்கள். அத்துடன் எவ்வகையான தொடர்கற்றல்கள் உங்களுக்கு உண்டு என்பதையும், அத்துடன் எத்தொழிற் பகுதியில் நீங்கள் ஒரு தொழிலைத் தேடமுடியும் என்பதையும் அறிந்துகொள்ளுங்கள்.

”பாடசாலையின் பின்னர் என்ன?” என்ற கையேடு சுவிஸ் கல்விமுறையைப் பற்றிய ஓர் நல்ல கண்ணோட்டத்தைத் தரும். இக்கையேடு பல மொழிகளில் மொழிபெயர்க்கப்பட்டுள்ளதுடன், இதைப் பொதுவாக தொழிற்கல்வி ஆலோசனை நிலையத்தில் பார்வையிடவும், இரவலாகப் பெறவும் முடியும்.

---

[3] ஜெர்மன்மொழி பேசும் சுவிஸ்: Regionales Arbeitsvermittlungszentrum (RAV); www.treffpunkt-arbeit.ch
பிரெஞ்சுமொழி பேசும் சுவிஸ்: Office régional de placement (ORP); www.espace-emploi.ch
இத்தாலிமொழி பேசும் சுவிஸ்: Ufficio regionale di collocamento (URC); www.area-lavoro.ch

[4] www.sbfi.admin.ch >Deutsch >Anerkennung ausländischer Diplome
>Français >Reconnaissance de diplômes étrangers
>Italiano >Riconoscimento dei diplomi esteri
>English >Recognition of foreign qualifications

**வளர்ந்தோருக்கு தொழிற்தேர்ச்சித் தகைமை**

வளர்ந்தோர் ஒரு தொழிற்தேர்ச்சித் தகைமையை அடைவதற்கு பல்வேறு சாத்தியங்கள் உள்ளன. இவற்றைப் பற்றித் தொழிற்கல்வி ஆலோசனை நிலையத்தில் கேட்டு அறிந்துகொள்ளுங்கள்.

**ஒரு பட்டப்படிப்பிற்கு அல்லது வேறு தொடர்கல்விகளுக்கான நிதியளிப்பு**

ஒருவேளை நீங்கள் ஒரு தொடர்கல்வியை அல்லது பட்டப்படிப்பை மேற்கொள்வதில் ஆர்வமுள்ளவராக இருந்தால், நிதியளிப்பு தொடர்பாகவும் நீங்கள் சிந்திக்கவேண்டும்! சுவிசில் கற்பவர்கள் அநேகமாக அவர்களின் பெற்றோரிடமிருந்து உதவி பெறுபவர்களாக அல்லது தங்கள் தேர்ச்சிக்கல்வியுடன், தொடர்கல்வி அல்லது பட்டப்படிப்பிற்கு தாமே நிதியளிக்கக்கூடியவாறு கற்றலுடன் வேலைசெய்பவர்களாகவும் உள்ளனர். குறிப்பிட்ட நிபந்தனைகளின் கீழ் மட்டும் உதவிப்பணம் பெறமுடியும்.[5]

**தொழிற்கல்வி ஆலோசனை நிலையத்தின்.[6] பல்வேறு வழங்கல்கள்**

நீங்கள் தொழிற்தேர்ச்சிக்கல்வி வழிகளைப் பற்றி அறிய விரும்பினால் அல்லது நீங்கள் கற்ற தொழிலை சுவிசில் மேற்கொள்வதையிட்டு சிந்தித்தால், தொழிற்கல்வி ஆலோசனை நிலையத்தை அணுகவேண்டும். தொழிற்கல்வி ஆலோசனை நிலையத்தில் அனைத்து தொழிற்தேர்ச்சிக் கல்விகளினதும், தொழில்களினதும் தகவல்களைப் பெறுவீர்கள். தொழிற்கல்வி ஆலோசனை நிலையங்கள் தகவற்சாலைகளைக் கொண்டுள்ளன. இத்தகவற்சாலைகள் வாசிகசாலைகள் போன்று தொழிற்படும்: நீங்கள் இது திறந்திருக்கும் நேரங்களில் முன்னறிவித்தலின்றி அங்கு சென்று, பல்வேறு தொழில்களையும், தேர்ச்சிக்கல்விகளையும் பற்றிய தகவல்களைப் பெறுவதுடன், பொதுவாக தகவலளிக்கும் பொருட்களையும் இரவலாகப் பெறமுடியும். தகவற்சாலையில் பல்வேறு விடயங்களையிட்ட தகவற்பிரசுரங்கள், ஆவணங்கள், உதாரணமாக உங்கள் பிரதேசத்தில் உள்ள ஆலோசனை நிலையங்களின் முகவரிகள் கூட உள்ளன. இவ் ஆவணங்களைப் பிரதேசமொழியில் பெறமுடியும். குறைந்தளவு தகவல்கள் மட்டுமே பல மொழிகளில் மொழிபெயர்க்கப்பட்டுள்ளன!

ஒருவேளை உங்களால் இத்தகவற்சாலையில் தனியாக விபரங்களைப் பெறமுடியாது இருந்தால், உங்கள் தொழில் நிலையையிட்டு ஒரு துறைசார் வல்லுனருடன் கதைப்பதற்கு, நீங்கள் உங்களுக்கு ஒரு தனிப்பட்ட ஆலோசனைக்கு விண்ணப்பிக்க முடியும் (விண்ணப்பம் நேரடியாக தகவற்சாலையில் அல்லது தொலைபேசி மூலம்). இக்கலந்துரையாடல் அந்தந்தப் பிரதேசமொழியிலேயே நடைபெறும் (வேறு மொழிகளைப் பற்றி விசாரியுங்கள்). தொழிற்கல்வி ஆலோசனை நிலையம் தொழில்செய்யக்கூடிய இடங்களைத் தேடித்தராது. ஆனால் நீங்கள் தொழிற்கல்வி ஆலோசனை நிலையத்தில் ஒரு துறைசார் வல்லுனரின் உதவியுடன் தொழிற் சாத்தியங்களைக் கதைக்கலாம் அல்லது புதிய எண்ணங்களைத் தேடலாம் அல்லது நீங்கள் துறைசார் வல்லுனரின உதவியுடன் உங்களுக்குப் பொருத்தமான ஒரு தொழிலை அல்லது தொழிற்தேர்ச்சிக் கல்வியைப் பெறுவதற்கான வழியைத் திட்டமிடலாம்.

சுவிசில் வேலைசெய்வதற்கும், கற்பதற்குமான வழிகள் உங்களிடம் இருந்து அதிக பொறுமையையும், காலத்தையும் எதிர்பார்க்கும்!

நாங்கள் இவ்வழியில் உங்களுக்கு அனைத்தும் நன்றாக நடக்கவும், அநேக வெற்றி பெறவும் வாழ்த்துகின்றோம்.

---

[5] உதவிப்பணம் தொடர்பான தகவல்கள் தொழிற்கல்வி ஆலோசனை நிலைய இணையத்தளத்தில்:

| | |
|---|---|
| ஜெர்மன்மொழி பேசும் சுவிசிற்கு: | berufsberatung.ch >Laufbahn >Tipps für die Laufbahnplanung >Finanzierung der Weiterbildung |
| பிரெஞ்சுமொழி பேசும் சுவிசிற்கு: | orientation.ch >Formation >Financer sa formation |
| இத்தாலிமொழி பேசும் சுவிசிற்கு: | orientamento.ch >Formazioni >Finanzare la propria formazione |

[6] ஒவ்வொரு மாநிலத்திலும் ஆகக்குறைந்தது ஒரு தொழிற்கல்வி ஆலோசனை நிலையம் இருக்கும். முகவரிகளை பாடசாலையில், உங்கள் கிராமசபையில், அல்லது பின்வரும் இணைத்தில்:

ஜெர்மன்: www.adressen.sdbb.ch பிரெஞ்சு: www.adresses.csfo.ch இத்தாலி: www.indirizzi.csfo.ch

தொழிற்கல்வி ஆலோசனை நிலையம் பொதுவாக ஒரு விசேட பெயரில் அல்லது அதன் சுருக்கத்தில் நன்றாக அறியப்பட்டிருக்கும்:

| | |
|---|---|
| சுவிசின் ஜெர்மன்மொழி பேசும் பகுதியில் | BIZ, Laufbahnzentrum |
| சுவிசின் பிரெஞ்சுமொழி பேசும் பகுதியில் | OP, SOPFA, OFPC, COS, OROSP, CIO, OCOSP |
| சுவிசின் இத்தாலிமொழி பேசும் பகுதியில் | orientamento, UOSP |

SDBB | CSFO – 2011